2003 ஏப்ரல் 23]

கல்விக்கென்று 700 கோடி ரூபாயை இன்றைக்கு ஒதுக்கி இருக்கிறது. அந்த வகையிலே பல்கலைக்கழகங்களுக்கு மட்டும் 100 கோடி ரூபாயை நாங்கள் grant ஆக தந்து கொண்டிருக்கிறோம். எனவே நான் ஏற்கெனவே சொன்னதைப்போல நீங்கள் விரும்புகிற பாடத் திட்டங்களை அங்கே கொண்டு வருவதற்கு அரசு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எந்தப் பிரிவுகள் வேண்டும் என்று நீங்கள் சொன்னாலும் அந்தப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு முறையாக பல்கலைக்கழகங்களுக்கு நாங்கள் அறிவுரையை நிச்சயமாக வழங்குவோம். இதிலே எந்தவித பாதிப்பும் இல்லை. இதிலே தடையும் இல்லை. எனவே வரவேற்பு இருக்கிற எந்தப் பிரிவு வேண்டுமானாலும் அங்கே தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே மன்னார்குடி கல்லூரிக்கும் நீங்கள் கேட்கிற அந்தப் பிரிவுகளை அரசாங்கம் நிச்சயமாகத் தொடங்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 288, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

288—

ஆரம்ப சுகாதார நிலையம்

***18070—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், கண்ணாக்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கண்ணாக்குடி கிராமத்தில் உள்ளது ஆரம்ப

சுகாதார நிலையம் அல்ல. அது ஒரு துணை சுகாதார நிலையம்தான். அந்த கண்ணாக்குடி துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு நபார்டு நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. 3-வது திட்டத்தில் நபார்டினுடைய நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் அந்தக் கட்டடப் பணி நிச்சயமாகத் தொடங்கப்பட்டுவிடும்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டதால் மாவட்ட மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றவிருப்பதாக அறிகிறேன். லால்குடியிலுள்ள அரசு மருத்துவமனையில் மாவட்ட மருத்துவமனையை இணைத்து செயல்படவேண்டுமென்பது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

அங்கு தண்ணீர் வசதி, இட வசதி மற்றும் போக்குவரத்து வசதி நன்றாக இருக்கிறது. அதனால் மாவட்ட மருத்துவமனையை லால்குடிக்கு மாற்ற தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை இடத்தில் மருத்துவக் கல்லூரியினுடைய மருத்துவமனை இயங்கி வருவதால் திருச்சி மாவட்டத்திலுள்ள ஏதேனும் ஒரு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும். மாவட்ட மருத்துவமனை அளவிற்கு அதைத் தரம் உயர்த்தவும் வேண்டும். அதுகுறித்து இப்போது துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. திருச்சி மாநகரத்திலே ஏற்கெனவே அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருப்பதாலே ஏதாவது ஒரு மருத்துவமனையை நாங்கள் மாவட்ட மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும். எனவே எந்த மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக நாம் தரம் உயர்த்தலாம் அல்லது மாவட்ட மருத்துவமனையாக கொண்டு வரலாம் என்று துறை இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு அந்த ஆய்வின் அடிப்படையிலே அரசு அதற்கு அனுமதி வழங்கும். ஆனால் இப்போது இந்த நேரத்திலே நான் எந்த மருத்துவமனையை, நாங்கள் அப்படி மாவட்ட மருத்துவமனையாக ஆக்க இருக்கிறோம் என்று என்னால் உறுதி சொல்ல முடியாது.

2003 ஏப்ரல் 23]

எனவே தகுதியான இடமாக நாங்கள் தேர்வு செய்து முறையாக அரசின் மூலமாக அறிவிப்புச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மாவட்ட வடக்குப் பகுதியில் தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, முசிறி, மணச்சநல்லூர், உப்பிலியாபுரம், துறையூர், புள்ளம்பாடி, லால்குடி ஆகிய 8 ஒன்றியப் பொதுமக்களும் திருச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்கிறார்கள். அது இடம் மாறுமானால் லால்குடிக்கு வந்தால்தான் கஷ்டமில்லாமல் மக்கள் வரமுடியும். திருச்சியில் போக்குவரத்து நெரிசல் உள்ளது. அதோடு லால்குடி புறநகர்ப் பகுதியிலுள்ளதால் டிராஃபிக் இல்லாமல் நோயாளிகள் வருவதற்கு சுலபமாக இருக்கும். மேலும் மேற்படி ஒன்றியத்திலிருந்து திருச்சி வரும் தூரமும், லால்குடி செல்லும் தூரமும் ஒரே தூரமாகும். எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக, கனவாக இது இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும், அதேநேரத்தில் மாவட்ட மக்களுடைய வசதியும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 289, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

289—

சத்துணவுக் கூடங்கள்

***23497—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS